3rd July 1962]

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : ஏற்கனவே இதுமாதிரி ஒரு அட்வைசரி கமிட்டி இருக்கிறது. அங்கே நல்ல முறையில் பரிசீலனை செய்துதான் காடுகள் வளர்க்கப் படுகின்றன. ஊரில் உள்ளவர்கள் பாரஸ்ட் நிலம் வேண்டுமென்று சொல்வது நியாயமில்லை என்று கனம் மெம்பருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. ஷண்முகம் : ஒவ்வொரு கிராமங்களிலும் மாடுகள் மேய்வதற்கு புறம்போக்கு நிலம் இருந்து வந்திருக்கிறது. ஆனல் சில காலமாக அந்தப் புறம்போக்குகள் எல்லாம் தனி நபர்களால் ஆக்கிரமித்துக்கொள்ளப்பட்டுவிட்டால் சர்க்காரால் பாராமரிக்கப் படாமல் போய்விட்டது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக் கிறதா? அப்படியிருந்தால் மறுபடியும் அவற்றை மேய்ச்சல் நிலமாக மாற்றுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அந்த விபரத்துக்கு தனிக் கேள்வி போடும்படி கனம் மெம்பரை கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சா. கணேசன் : இந்தக் காடுகள் விஷயத்தில் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மற்றப் பகுதிகளிலுள்ள காடு களுக்கும் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சை போன்ற பகுதி களில் உள்ள காடுகளுக்கும் ஒரு விதமான சம்பந்தமும் இல்லை. இங்கிருக்கும் செடிகள் ஒரு முழம் இரண்டு முழத்திற்கு மேல் வளருவது இல்லை. நீலகிரி காடுகளோடு இவற்றை ஒப்பிட்டுக் காட்டுவது சரியல்ல.

MR. SPEAKER : What is the question which the hon. Member wants to put?

திரு. சா. கணேசன் : I want to explain. இந்தக் காடு நீலகிரி காடுகளோடு ஒப்பிட்டால் வேறு முறை அனுஷ்டிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அதற்குத் தனிக் கேள்வி போடும்படியாக கனம் மெம்பர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு விவசாய பாங்கு (வேட்டவலம்)

*91 **கேள்வி.—திரு. கு. கோபாலக் கவுண்டர் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருவண்ணுமலை தாலுகா, வேட்டவலம் கிராமத்தில் கூட்டுறவு விவசாய பாங்கு வேண்டுமென்று கிராம ஜனங்கள் அரசாங்கத்துக்கு மனு செய்துள்ளார்களா ?

(இ) அப்படியானுல், அதன்மேல் என்ன உத்தரவிடப் பட்டது ?

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் :

(அ) இல்லை, ஐயா.

(இ) இந்தக் கேள்வி எழவில்லை.

Public fountains for Tiruchirappalli Municipality

* 92 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether proposals for opening additional public fountains in Tiruchirappalli municipal area were received by the Sanitary Engineer from the Municipal Council of Tiruchirappalli;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the reasons for the delay in communicating the sanction?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes, Sir.

(*b*) The Municipal Council, Tiruchirappalli has asked for the installation of one hundred and sixty-one additional public fountains at the rate of six for each ward.

(*c*) The Chief Engineer's report has recently been received and it is under consideration.

திரு. மீ. கலியாணசுந்தரம் : எனக்குக் கிடைத்திருக்கும் தகவலின்படி இந்தத் திட்டமானது சானிடரி எஞ்சினியருக்கு அனுப்பப்பட்டு ஒரு வருஷத்திற்கு மேலாகிறது. இவ்வளவு கால தாமதத்திற்குக் காரணம் என்ன? இந்தத் திட்டம் உடனடியாக அனுமதிக்கப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சானிடரி எஞ்சினியருடைய தகவலுக்காக வேண்டித்தான் அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அது வந்த உடனே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

Presidents of panchayats (training)

* 93 Q.—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any scheme to give training to the panchayat presidents ; and

(*b*) if so, the cost of such training?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Rs. 4·32 lakhs.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சார், ரூ. 4,32,000 செலவழித்து இப்போது இருக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களுக்குப் பயிற்சி அளித்திருப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இப்போது இருக்கும் தலைவர் அவர்கள் பெற்ற பயிற்சியை கிராம மக்களுக்கும் மற்றைய முறைகளிலே அனுபவ சாத்தியமாகச் செய்வதற்கு இருக்கிற காலவரையை ஒத்தி வைக்க அரசாங்கம் முன் வருமா?